இருக்கும் 28 ஏக்கரில் ஆறு ஏக்கருக்கு மேல் ஆக்கிரமிப்பு இருக்கிறது. இதை இப்படியே விட்டால், நாளடைவில் கல்லூரிக்கே இடம் இல்லையென்ற நிலை வந்துவிடும். பொது நன்மையைப் பார்க்கும்போது, இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்பதில் அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. சுற்றுச்சுவர் கட்டினால்தான் இதைத் தடுக்க முடியும் என்று மாணவர்கள் சொல்லும் கருத்தை உண்மை என்று எடுத்துக்கொள்ளுகிறோம். அந்த அடிப்படையிலே முள் வேலி என்பதை மாற்றி சுற்றுச்சுவர் கட்ட முடிவு எடுப்பதற்காக அரசு உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இன்று தனி நபர் தீர்மானத்தை விவாதிக்க இருக்கிறோம். ஆகவே தனி உறுப்பினர் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். தனி நபர் தீர்மானத்தை ஒத்திவைக்கக் கூடாது. அது ஒரு முக்கியமான தீர்மானம். ஆகவே அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(1) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. சோ. ஆறுமுகம்: நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சோ. ஆறுமுகம்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதால்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நிலைமை என்னவென்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தால், அதற்குரிய பதிலை அளிக்க, தகவல்கள் சேகரிக்க வேண்டும். என்னுடைய கவனத்தில் இருக்கிறதென்றால், நிராகரிக்கப்பட்டதாக அர்த்தம் இல்லை, தகவல் சேகரிக்கப்படுகிறது என்றுதான் பொருள்.

1981 மார்ச் 7]

திரு. சோ. ஆறுமுகம் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால்தான், அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அவை கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்தால்கூட, அதுபற்றி முடிவு எடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், நான் நேற்றைய தினமே கொடுத்திருக்கிறேன். இது குறித்து தகவல்களைச் சேகரிப்பதில் அப்படி என்ன சிரமம் இருக்கிறது? இப்படி நாளைக் கடத்துவது என்பது, எங்களுடைய பணியைத் தடை செய்வது போலவும், பொது மக்களுடைய பிரச்சினைகளை அலட்சியப்படுத்துவதைப் போலவும் இருப்பதால், இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு நீங்கள்தான் முடிவு கட்ட வேண்டும். ஆகவே உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதற்குத் தீர்ப்புத் தேவையில்லை. ஏற்கெனவே சொன்னதுதான் கருத்து.

(2) வினாக்கள்-விடைகள் குறித்து.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தினந்தோறும் வரும் வினாப் பட்டியலில் இப்போது வினாக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நான் விசாரித்ததில், சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில்கள் வரவில்லை என்று அறிந்தேன். அது சரியோ, தவறோ என்பது தெரியாது. கேள்விகள் முன்பே அனுமதிக்கப்பட்டு அது சேர்க்கப்பட்ட பிறகும்கூட, சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில் வரவில்லை என்பது சரியல்ல. ஒவ்வொரு நாளும் 10 கேள்விகள் எடுத்துக்கொள்ளுவதற்குப் பதிலாக ஐந்து கேள்விகள்தான் இப்போது எடுத்துக்கொள்ளுகிறோம். இது குறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளை அமைச்சர்கள் துறைகளுக்கு அனுப்புகிறார்கள். அங்கிருந்து பதில் வந்தவுடனே ஒன்றையும் நிறுத்தாமல் எடுத்துக்கொள்ளுகிறோம். சில நேரங்களில் பத்துக் கேள்விகளுக்கு மேலாகக் கூட போடுகிறோம். குறைவாகப் போட்டது வேண்டுமென்றே போடவில்லை. பதில் வராததால்தான் சேர்க்கவில்லை. இனி துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, 40, 45 நாட்களுக்குள் பதில் தராவிட்டால், வினாக்களை வினாப் பட்டியலில் சேர்த்துவிட வேண்டும் என்று தாங்களே முன்னால் அறிவித்திருக்கிறீர்கள். அப்படியும் பல